தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

- குறள்

நகராட்சி அலுவலகம்,
திருவத்திபுரம்.
நாள் 16.02.2026

**<u>மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரண மன்ற கூட்டம் 20.02.2026 ஆம் நாள் வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகரமன்ற தலைவர்,
திருவத்திபுரம் நகராட்சி.

**பொருள் எண் 1**

திருவத்திபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக முன்புற கடைகளுக்கு 31.12.2025 தேதியன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்காணும் விவரப்படி கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு.

அலுவலக முன்புற வணிக வளாக கடைகள்

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கடைகளின் எண்கள் | ஏலத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்) No: 20 ஒத்தவாடைத் தெரு, பிராமிணர் கோவில் தெரு. செய்யார் | கடை எண்: 2 | ரூ.8300/- |
| 2 | திரு. V. வெங்கடேசன் No. 12 ராஜாஜி தெரு .செய்யார் | | ரூ.8250/- |
| 3 | திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்) No: 20 ஒத்தவாடைத் தெரு, பிராமிணர் கோவில் தெரு. செய்யார் | கடை எண்: 3 | ரூ.8300/- |
| 4 | திரு. T.G. யுவராஜ் No:42 நேரு நகர். செய்யார் | | ரூ.8250/- |
| 5 | திரு.S.கோபாலகிருஷ்ணன் (கான்ராக்டர்) No. 92/82 குமரன் தெரு, | | ரூ.7800/- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யார் | கடை எண்: 6 | |
| 6 | திரு. P. வரதராஜன்<br>No. 5/34 வள்ளலார் தெரு, அம்பத்துர்,<br>சென்னை. | | ரூ.7750/- |
| 7 | திரு.L. பெரோஸ்கான்<br>No. 106 காமராஜ் நகர்,<br>செய்யார் | கடை எண்: 7 | ரூ.7750/- |
| 8 | திரு. P. சரவணன்<br>No. 22 வேளாளர் தெரு,<br>ஆக்கூர், செய்யார் | | ரூ.7800/- |
| 9 | திரு. V. K. செல்வகுமார்<br>No. 245 தோப்பு தெரு, அப்துல்லாபுரம்<br>கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா. | | ரூ.7800/- |
| 10 | திரு.L. அம்மையப்பன்<br>No. 640 ஆற்காடு சாலை, பைங்கினர்<br>கிராமம், செய்யார் தாலுக்கா. | கடை எண்: 10 | ரூ.7750/- |
| 11 | திரு.குமரன்<br>த/பெ T. வெங்கடேசன்<br>No. 119/18C காந்தி சாலை, செய்யாறு | | ரூ.10600/- |
| 12 | திரு.S.காதர்ஷிரிப்<br>No. 228 சமாதியான் குளத் தெரு,<br>செய்யார் | | ரூ.7850/- |
| 13 | திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்)<br>No: 20 ஒத்தவாடைத் தெரு,<br>பிராமிணர் கோவில் தெரு. செய்யார் | கடை எண்: 12 | ரூ.7900/- |
| 14 | திரு. V. கோபு த/பெ விஸ்வநாதன்<br>No . 82 சன்னதி தெரு , செய்யார் | | ரூ.8100/- |

| | | | |
|---|---|---|---|
| 15 | திரு.J. வெங்கடேசன்<br>No. 14/11 விவேகானந்தர் தெரு,<br>செய்யார் | கடை எண்: 14 | ரூ.7800/- |
| 16 | திரு..V .கோபாலகிருஷ்ணன்<br>No. 988 ஏழுமலை தெரு,<br>கீழ்புதுபாக்கம் கிராமம், செய்யார் | | ரூ.7750/- |
| 17 | திரு.S. கிருஷ்ணன்<br>No. 147 பள்ளிக்கூடத்தெரு,<br>கீழ்மட்டை கிராமம், செய்யார் | கடை எண்: 19 | ரூ.7800/- |
| 18 | திரு.S. திருமாறன்<br>No. 4 திரு.வி.க தெரு,<br>நேரு நகர், செய்யார் | | ரூ.7850/- |
| 19 | திருமதி. J.ஹேமப்பிரியா<br>No. 16 முகமது பேட்டை தெரு,<br>செய்யார் | | ரூ.8000/- |
| 20 | திரு. V. K. செல்வகுமார்<br>No. 245 தோப்பு தெரு, அப்துல்லாபுரம்<br>கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா. | கடைஎண்: 20 | ரூ.7850/- |
| 21 | திரு.S. கிருஷ்ணன்<br>No. 147 பள்ளிக்கூடத்தெரு,<br>கீழ்மட்டை கிராமம், செய்யார் | | ரூ.8300/- |
| 22 | திரு. V. K. செல்வகுமார்<br>No. 245 தோப்பு தெரு, அப்துல்லாபுரம்<br>கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா. | கடைஎண்: 21 | ரூ.7950/- |
| 23 | திரு.J. மனோகரன்<br>No. 129/2 கிழக்கு தெரு,<br>காழியூர் கிராமம், | | ரூ.8000/- |
| 24 | திரு.S.சிவக்குமார் | | ரூ.10300/- |

| | | | |
|---|---|---|---|
| | No. 549 P.T உஷா தெரு,<br>கீழ்புதுப்பாக்கம் , செய்யார். | கடைஎண்: 22 | |
| 25 | திருமதி. S. பிரியதர்சினி<br>No. 549 P.T உஷா தெரு,<br>கீழ்புதுப்பாக்கம் , செய்யார். | | ரூ.10500/- |

மேற்காணும் ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய நபர்களுக்கு கடைகள் ஒப்படைப்பு செய்வதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. அலுவலக முன்புற கடை எண் ; 2 க்கு வரிசை எண்: 1 –ல் உள்ள திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்) உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.8300/- கோரியுள்ளார்.
2. அலுவலக முன்புற கடை எண் ; 3 க்கு வரிசை எண்: 3 –ல் உள்ள திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்) உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.8300/- கோரியுள்ளார்.
3. அலுவலக முன்புற கடை எண் ; 6 க்கு வரிசை எண்: 5 –ல் உள்ள திரு.S.கோபாலகிருஷ்ணன்உயர்ந்தபட்சஏலக்கேள்விதொகை-ரூ.7800/- கோரியுள்ளார்.
4. அலுவலக முன்புற கடை எண் ; 7 க்கு வரிசை எண்: 8 –ல் உள்ள திரு.சரவணன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7800/- கோரியுள்ளார்.
5. அலுவலக முன்புற கடை எண் ; 10 க்கு வரிசை எண்: 11 –ல் உள்ள திரு.குமரன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.10600/- கோரியுள்ளார்.
6. அலுவலகமுன்புறகடைஎண் ;12க்குஒப்பந்தப்புள்ளி உயர்ந்தபட்ச கேள்வி கோரியுள்ளார். மேற்படி குத்தகைதாரரின் செல்வநிலை சான்று சரியில்லாததால் இரத்து செய்யப்பட்டது. எனவே ஏலத்தொகையில் உயர்ந்தபட்ச கேள்வி கூறிய திருமதி. காஞ்சனாவிற்கு கடை எண் ;12 வரிசை எண் ;12 –ல் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7900/- கோரியுள்ளார்
7. அலுவலக முன்புற கடை எண் ; 14 க்கு வரிசை எண்: 15 –ல் உள்ள திரு.J.வெங்கடேசன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7800/- கோரியுள்ளார்.
8. அலுவலக முன்புற கடை எண் ; 19 க்கு வரிசை எண்: 16 –ல் உள்ள திரு.S.திருமாறன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7850/- கோரியுள்ளார்
9. அலுவலக முன்புற கடை எண் ; 20 க்கு வரிசை எண்: 21 –ல் உள்ள திரு.S. கிருஷ்ணன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.8300/- கோரியுள்ளார்
10. அலுவலக முன்புற கடை எண் ; 21 க்கு வரிசை எண்: 23 –ல் உள்ள திரு. J. மனோகரன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.8000/- கோரியுள்ளார்
11. அலுவலக முன்புற கடை எண் ; 22 க்கு வரிசை எண்: 25 –ல் உள்ள திருமதி. பிரியதர்ஷினி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.10500/- கோரியுள்ளார்

பொருள் எண் 2

திருவத்திபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக முன்புற கடைகளுக்கு 13.01.2026 தேதியன்று நடைபெற்ற மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளியில் கீழ்காணும் விவரப்படி18 நபர் கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு.

அலுவலக முன்புற வணிக வளாக கடைகள்

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கடைகளின் எண்கள் | ஏலத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.கோ.சுந்தரம்<br>No: 449 பஜனை கோவில் தெரு,<br>சீவரம் காலனி,<br>சீவரம் பிரம்மதேசம். | கடை எண்: 01 | ரூ.8650/- |
| 2 | திரு. S.ராஜசேகர்<br>No: 453 K.T.S மணி தெரு,<br>சந்தியா நகர் கடைசி,<br>காஞ்சிபுரம். | | ரூ.8600/- |
| 3 | திரு.முகமது இதயத்துல்லா<br>த/பெ அப்துல் நபி,<br>No: 63/12 புண்டி ,வாலாஜா | | ரூ.9724/- |
| 4 | திருமதி. ராகினி<br>1-வது குறுக்குத் தெரு,<br>கன்னியம் நகர், செய்யார். | | ரூ.9600/- |
| 5 | திருமதி. K.Rநிறைமதி<br>No: 12, 3 வது குறுக்கு தெரு,புதுத் தெரு, செய்யார். | கடை எண்:04 | ரூ.9000/- |
| 6 | திரு. V. தீனதயாளன்<br>13(2) நேரு நகர்,<br>செய்யார். | | ரூ.12,100/- |
| 7 | திரு. N. பிரவின்குமார்<br>No: 5 ஆதிகேசவ பெருமாள் கோவில் தெரு, செய்யார். | கடை எண்:05 | ரூ.11,100/- |
| 8 | திரு. மனோகரன்<br>No: 325 கிழக்கு தெரு,<br>காழியுர் கிராமம்,செய்யார். | | ரூ.10,900/- |
| 9 | திருமதி. ஸ்ரீ பூர்வாதேவி | | ரூ.14,100/- |

| | | | |
|---|---|---|---|
| | No: 4/32 சன்னதி தெரு, செய்யார். | | |
| 10 | திரு. புகழேந்தி<br>No: 64 இராஜாஜி தெரு, செய்யார். | கடை எண்:08 | ரூ.12,500/- |
| 11 | திரு. K. மகாராஜன்<br>KMV கன்ஜஸ்ட்ரக்ஸன்<br>அண்ணாமலையார் தெரு,<br>கீழ்புதுபாக்கம் பிரிவு, | | |
| 12 | திரு. V. தெய்வசிகாமணி<br>No: 44 அண்ணா நகர்,<br>செய்யார். | கடை எண்: 13 | ரூ.12,600/- |
| 13 | திரு. V. கோபு<br>No: 82 சன்னதி தெரு, செய்யார் | | ரூ.11,200/- |
| 14 | திரு.அம்மயப்பன்<br>No: 640 ஆற்காடு சாலை, பைங்கினீர்,<br>செய்யார் | கடை எண்: 16 | ரூ.7950/- |
| 15 | திரு.V.K. செல்வகுமார்<br>No: 245 தோப்பு தெரு<br>அப்துல்லாபுரம் கிராமம், | | ரூ.10100/- |

மேற்காணும் ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய நபர்களுக்கு கடைகள் ஒப்படைப்பு செய்வதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. அலுவலக முன்புற கடை எண்: 01 க்கு வரிசை எண் : 03 –ல் உள்ள திரு.முகமது இதயதுல்லா உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9724/- கோரியுள்ளார்.
2. அலுவலக முன்புற கடை எண்: 04 க்கு வரிசை எண் : 06 –ல் உள்ள திரு. V. தீனதயாளன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.12,100/- கோரியுள்ளார்.
3. அலுவலக முன்புற கடை எண்: 05 க்கு வரிசை எண் : 07 –ல் உள்ள திரு. N. பிரவின்குமார் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.11,100/- கோரியுள்ளார்
4. அலுவலக முன்புற கடை எண்: 08 க்கு வரிசை எண் : 09 –ல் உள்ள திருமதி. ஸ்ரீ பூர்வாதேவி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.14,100/- கோரியுள்ளார்
5. அலுவலக முன்புற கடை எண்: 13 க்கு வரிசை எண் : 12 –ல் உள்ள திரு. V. தெய்வசிகாமணி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.11,100/- கோரியுள்ளார்
6. அலுவலக முன்புற கடை எண்: 16 க்கு வரிசை எண் : 15 –ல் உள்ள. திரு. V.K உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.11,100/- கோரியுள்ளார்

ந.க.எண்: 1153/2024/அ1

**பொருள் எண் 3**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பகுதியில் அமைந்துள்ள புதிய மார்க்கெட் கடையான ஷெட்டர் போட்ட கடை எண்: 23 க்கு மற்றும் கடை எண்: 24 க்கு 07.11.2024 அன்று நடைப்பெற்ற பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொண்ட திரு. A,N ஜானகிராமன் என்பவர் ஏலவைப்புத் தொகையாக ரூ. 2,00,000/- D.D No: 80892 , நாள்: 22.10.2024 கனரா வங்கி , சென்னை . கடை எண்: 24 க்கு D.D No: 80892 , நாள்: 22.10.2024 கனரா வங்கி , சென்னை ஏலவைப்புத் தொகை செலுத்தியுள்ளார். கடையை ஏலம் எடுத்த நாள்முதல் தற்போது வரை எந்தத் தொகையையும் செலுத்தவில்லை. தற்போது தனக்கு கடை வேண்டாம் எனவும் ஏல வைப்புத் தொகையை திரும்ப வழுங்குமாறு கோரியுள்ளார். பன்னிரண்டு மாதவாடகை 5100+GST18%918 = 6018x12=72,216x2=1,44,432/- பிடித்தம் செய்து மீதம் உள்ள தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 227/2024/அ1

**பொருள் எண் 4**

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை இனத்திற்கு 15.09.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததார் ரூ.4,00,000/-த்தை ஏல வைப்பு தொகையாக செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டார். அதிகபட்ச ஏல கேள்வி ரூ.14,50,000/-ஏலம் எடுத்து நடத்தி வந்தார்.இரண்டாம் ஆண்டு ஏல தொகை 14,50,000 + 5% உயர்வு 72,500=15,22,500 வருமான வரி 1%, 15,225 ஆக மொத்தம் 15,22,500+15,225 =15,37,725 ரூபாயும், மூன்றாம் ஆண்டு ஏல தொகை = 15,22,500 + 5% உயர்வு 76,125= 15,98,625 ரூபாய் ஏல தொகை செலுத்தாமல் இடையிலேயே குத்தகை நடத்தாமல் சென்றுவிட்டார். நிர்வாகத்திற்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் நகராட்சி பணியாளர்கள் மூலமாக துறை ரீதியாக தொடர்ந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பணியாளர்கள் இரண்டு நபருக்கு மாத ஊதியம் ரூபாய் 100871/- மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் இரசீது புத்தகம் நாள் ஒன்றுக்கு ரூ.80x3=240 மற்றும் மின் கட்டணம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை ரூ. 6000/- ஆக மொத்தம் ரூ.1,11,071/- அலுவலகத்தின் மூலமாக செலவுமேற்கொள்ளப்படுகிறது. மேற்படி தொடர்ந்து பல முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் எடுக்க எவரும் முன் வரவில்லை மற்றும் பேருந்து நிலையம் இடிக்கும் தருவாயில் உள்ளதால் இருசக்கர வாகனம் மிக குறைவாகவே காணப்படும். எனவே இனி வரும் காலங்களில் நிர்வாகத்திற்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் இருக்க ஏல தொகையை குறைத்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்க ஆணையாளர் அவர்களின் மேலான ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு:

மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 073/2018/அ1

**பொருள் எண் 5**

திருவத்திபுரம் நகராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தை குத்தகை இனத்திற்கு முழுமையாக குத்தகை தொகை செலுத்தாத குத்தகைதாரர் திருமதி. C.சித்ரா என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டது. W.P.No: 21840/2023 சென்னை உயர்நீதி மன்றம் அரசு வழக்கறிஞரிடமிருந்து வழக்கு கட்டணம் ரூ.30,000/- செலுத்த கோரி கேட்பு பட்டியல் வரப் பெற்றுள்ளது. மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 073/2018/அ1

**பொருள் எண் 6**

இந்நகராட்சியில் அனுமந்தன் பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக முன்புற வணிகவளாக கட்டிடத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை தினச்செய்தி நாளிதழில் டிசம்பர்-20 சனிக்கிழமை அன்று வெளியிடப்பட்டதற்குகான பட்டியல் தொகை ரூ.27300/-யை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 1153/2024/அ1

**பொருள் எண் 7**

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பகுதியில் அமைந்துள்ள புதிய மார்க்கெட் கடைகளுக்கு தொடர்ந்து பல முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. மேற்படி ஏலம் எடுக்க முன்வரும் வியாபாரிகளிடமிருந்து ஏல வைப்புத் தொகையை குறைத்து தரக்கோரி விண்ணப்பம் வரப்பெற்றத்தின் பேரில்.

1. ஷெட்டர் போட்ட கடை 50-ல் 7- கடைகள் ஏலம் போக மீதமுள்ள 43- கடைகளுக்கு ஏல வைப்புத் தொகை செல்வநிலை சான்று இருந்தால் ரூ.1,80,000/- செல்வநிலை சான்று இல்லையெனில் ரூ.2,00,000/-
2. திறந்தவெளி காய்கறி கடைகள் 58-ல் 10-கடைகள் ஏலம் போக மீதமுள்ள 48 கடைகளுக்கு ஏல வைப்பு தொகை செல்வநிலை சான்று இருந்தால் ரூ.75,000/- செல்வநிலை சான்று இல்லையெனில் ரூ.1,20,000/-

3. திறந்தவெளி மீன் கடைகளுக்கு 32-ல் 14-கடைகள் ஏலம் போக மீதமுள்ள 18 கடைகளுக்கு ஏல வைப்பு தொகை செல்வநிலை சான்று இருந்தால் ரூ.75,000/- செல்வநிலை சான்று இல்லையெனில் ரூ.1,20,000/- ஆக உள்ளது.

மேற்படி நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் அனைத்து கடைகளும் ஏலம் போகும் பொருட்டு ஏல வைப்பு தொகை குறைத்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. வியாபாரிகளிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கு.
2. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்: 227/2024/அ1

பொருள் **எண் 8**

திருவத்திபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக முன்புற கடைகளுக்கு 04.02.2026 தேதியன்று நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்காணும் விவரப்படி 11 நபர் கலந்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு.

அலுவலக முன்புற வணிக வளாக கடைகள்

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கடைகளின் எண்கள் | ஏலத்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. R. குமார்<br>No: 84 பள்ளிக்கூடத்தெரு,<br>பாப்பந்தாங்கல் கிராமம்,<br>செய்யார். | கடை எண்: 09 | ரூ.7900/- |
| 2 | திருமதி. S. ரஞ்சினி<br>க/பெ சரவணன்<br>No: 9/17 புதுத் தெரு,<br>5-வது குறுக்கு தெரு, செய்யார் | | ரூ.7850/- |
| 3 | திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்)<br>No: 20 ஒத்தவாடைத் தெரு,<br>பிராமிணர் கோவில் தெரு. செய்யார் | கடை எண்: 11 | ரூ.7900/- |
| 4 | திரு. பெருமாள்<br>No: 20 ஒத்தவாடைத் தெரு,<br>பிராமிணர் கோவில் தெரு. செய்யார் | | ரூ.7850/- |
| 5 | திருமதி. பரிமளா க/பெ ராமசாமி<br>No: 180 பஜனை கோவில் தெரு, | கடை எண்: 15 | ரூ.7800/- |

| | | | |
|---|---|---|---|
| | கிழாதகர் கிராமம்<br>செய்யாற்றை வென்றான் அஞ்சல் | | |
| 6 | திரு. சரவணன்<br>No. 964 பசும் பொன் நகர்,<br>செய்யார் | | ரூ.7850/- |
| 7 | திரு. T. ராஜ் த/பெ தாந்தோனி<br>No:48 /8 T.M. ஆதிகேசவன் தெரு<br>செய்யார் | கடை எண்: 17 | ரூ.7850/- |
| 8 | R. வினோ<br>No:35 T.M. ஆதிகேசவன் தெரு<br>செய்யார் | | ரூ.7800/- |
| 9 | திரு. K. ராமு த/பெ கிருஷ்ணன்<br>No:47 கண்ணகி தெரு<br>வேல் சோமசுந்தரம் நகர்<br>செய்யார் | கடை எண்: 18 | ரூ.7850/- |
| 10 | திருமதி. K. ராகினி<br>1-வது குறுக்குத் தெரு,<br>கன்னியம் நகர், செய்யார். | | ரூ.7800/- |
| 11 | திரு.சிபிராஜ்s/o சிவக்குமார்<br>No. 549 P.T உஷா தெரு,<br>கீழ்புதுப்பாக்கம் , செய்யார் | கடை எண்: 23 | ரூ.7950/- |
| 12 | திரு.S.சிவக்குமார்<br>No. 549 P.T உஷா தெரு,<br>கீழ்புதுப்பாக்கம் , செய்யார் | | ரூ.7900/- |

மேற்காணும் ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய நபர்களுக்கு கடைகள் ஒப்படைப்பு செய்வதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. அலுவலக முன்புற கடை எண் ; 09 க்கு வரிசை எண்: 1 –ல் உள்ள திரு. R. குமார் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7900/- கோரியுள்ளார்
2. அலுவலக முன்புற கடை எண் ; 11 க்கு வரிசை எண்: 03 –ல் உள்ள திருமதி. காஞ்சனா (கான்ராக்டர்) உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7900/- கோரியுள்ளார்.
3. அலுவலக முன்புற கடை எண் ; 15 க்கு வரிசை எண்: 05 –ல் உள்ள திரு. சரவணன் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7850/- கோரியுள்ளார்.

4. அலுவலக முன்புற கடை எண் ; 17 க்கு வரிசை எண்: 07 –ல் உள்ள திரு. T. ராஜ் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7850/- கோரியுள்ளார்.
5. அலுவலக முன்புற கடை எண் ; 18 க்கு வரிசை எண்: 09 –ல் உள்ள திரு. K. ராமு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7850/- கோரியுள்ளார்.
6. அலுவலக முன்புற கடை எண் ; 23 க்கு வரிசை எண்: 11 –ல் உள்ள திரு. சிபிராஜ் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை- ரூ.7850/- கோரியுள்ளார்.

ந.க.எண்: 1153/2024/அ1

**பொருள் எண் 9**

திருவத்திபுரம் நகராட்சியில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 97 w 5941 வாகனத்திற்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு கேட்பு பட்டியல் தொகை ரூ.2951.00யை Jain Cars Auto Sales Pvt Ltd,வேலூர் நிறுவனத்திடம் இருந்து வரப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ.2951.00யை Jain Cars Auto Sales Pvt Ltd,வேலூர் நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

ஈப்பு வாகனத்தின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 1573/2024/இ1**

**பொருள் எண் 10**

திருவத்திபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காகவும் மற்றும் நூலகம் அறிவுசார் மையத்தில் வாசக்கர்கள், மாணவ , மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இணைய வழி சேவை Bharti Airtel நிறுவனத்தின் மூலமாக பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி நகராட்சி அலுவலகத்தில் இணைய வழி சேவை பொருத்தப்பட்டு ஒரு மாத பயன்பாட்டிற்கான கட்டணமாக ரூ.761.00 மற்றும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் இணைய வழி சேவை பொருத்தப்பட்டு ஒராண்டு பயன்பாட்டிற்கான கட்டணமாக ரூ.9619.00 யும் ஆக மொத்தம் ரூ.10380.00 யை இணைய வழி (online Payment )மூலமாக மட்டுமே செலுத்த இயலும் வகையில் கேட்பு பட்டியல் வரப்பட்டு செலுத்தப்பட்டது. மேற்படி இணைய வழி மூலமாக உரிய கட்டணங்கள் செலுத்திய திரு.T.கீர்த்திவாசன். இளநிலை உதவியாளர் பெயருக்கு பட்டியல் தொகை ரூ.10380.00யை வழங்கியமைக்கும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 ன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

இணைய வழி சேவை பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டு செலவினம் செய்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

ந.க.எண் 1606/2024/இ1

**பொருள் எண் 11**

திருவத்திபுரம் நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டம் 2025-2026ன் கீழ் கீழ்காணும் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை செ.மு. எண் அ4/1958/2024 நாள் 29.09.2025 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | கொடநகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியின் சத்துணவு மையத்திற்கு வைப்பறையுடன் கூடிய புதிய சமையலறை கட்டிடம் கட்டுதல் (வகை2) | 8.44 | அரிகிருஷ்ணன் ஒப்பந்ததாரர் | 0.52% அதிகம் |
| | | | பெருமாள், ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் பணிகளை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பெருமாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 1062/2025/இ1**

**பொருள் எண் 12**

திருவத்திபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024-2025ன் கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் செ.மு.எண் அ6/5400/2024 நாள் 27.01.2026ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 13.02.2026ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | திருவத்திபுரம் நகராட்சி கிழக்கு மாட வீதி இராமர் நகரில் | 15.00 | திரு.அன்பழக்ன் ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிமெண்ட் சாலை அமைத்தல் | | முகில் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ், ஒப்பந்ததாரர் | 0.52% அதிகம் |
| 2. | திருவத்திபுரம் நகராட்சி வார்டு எண் 3ல் விநாயகர் தெருவில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | திரு.அன்பழக்ன் ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | முகில் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ், ஒப்பந்ததாரர் | 1.31% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1 மற்றும் 2ல் காணும் பணிகளை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.அன்பழகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 883/2025/இ1**

**பொருள் எண் 13**

திருவத்திபுரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2025-2026 கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 23.01.2026ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Providing Cement Concrete Road at old D.S.P. Street (039004R048) in Thiruvathipuram Municipality | 12.00 | அரிகிருஷ்ணன் ஒப்பந்ததாரர் | 0.52% அதிகம் |
| | | | பெருமாள், ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் பணிகளை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பெருமாள் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 1062/2025/இ1**

**பொருள் எண் 14**

திருவத்திபுரம் நகராட்சியில் ஒப்பந்ததாரரின் நிறுவனங்கள், பணியாளர்கள் ஆகியோர்களின் வேலைப்பட்டியல் மற்றும் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட CGST 1%, SGST 1% , TDS ஆகிய இனங்களுக்கு E-Filing செய்த வகையில் (01.04.2024 முதல் 31.03.2025 வரை)

M.Sivakumar & Co என்ற நிறுவனத்திற்கு கட்டணத் தொகை ரூ.20200/- மட்டும் வழங்க நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

வருவாய் நிதியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1476/2024/பி1

**பொருள் எண் 14**

திருவத்திபுரம் நகராட்சியின் 2026-2027 ஆம் ஆண்டுக்கான வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, மற்றும் கல்வி நிதி ஆகியவைகளுக்கான உத்தேச வரவு - செலவு நிதி நிலை அறிக்கை (Budget) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 085/2026/பி1

**பொருள் எண் 15**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2025 ல் விதி எண் 223 ன் படி , நகராட்சியில் பணிபுரியும் இளநிலை/ வருவாய் உதவியாளர்கள், நேர்முக எழுத்தர் மற்றும் தட்டச்சர் ஆகியோர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளுக்கான கட்டணம் செலுத்த இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் கடித ந.க.எண் 42/2025/அ3 நாள்.06.01.2026 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆண்டுதோறும் மேற்படி நிறுவனத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களுக்கு தொகை செலுத்த வேண்டியிருப்பதால் தோராயச் செலவினத்தொகை ரூ150000/ வழங்க நகரமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.S.ரகுராமன், இளநிலை உதவியாளர் 19.01.2026 முதல் 13.02.2026 வரையான நாட்களுக்கு பயிற்சியில் கலந்து கொண்டமைக்கு பயிற்சி கட்டணம் ரூ 20000/ வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்129/2025/சி1**

**பொருள் எண் 16**

திருவத்திபரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான புகைபோக்கி இயந்திரங்களான வாகன புகைபோக்கி-1 எண்ணிக்கை, கை புகைபோக்கி – 2 எண்ணிக்கை, சிறிய கை புகைபோக்கி – 4 எண்ணிக்கை மற்றும் புகைபோக்கி பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான சிலிண்டர் 200 எண்ணிக்கையில் இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக சப்ளை செய்திட 22.01.2026-ஆம் தேதி வரை உள்ளூர்/வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருள் | விலை ஒன்றுக்கு (GST உட்பட) |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ காளியம்மன் ட்ரேடிங் கார்பரேசன், நாமக்கல் - 2 | வாகன புகைபோக்கி - 1<br>கை புகைபோக்கி – 1<br>சிறிய கை புகைபோக்கி –1<br>சிறிய கை புகைபோக்கி சிலிண்டர் –1 | 5,22,740.00<br>94,164.00<br>21,420.00<br>330.40 |
| 2. | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், உரையூர், திருச்சி – 3 | வாகன புகைபோக்கி - 1<br>கை புகைபோக்கி – 1<br>சிறிய கை புகைபோக்கி –1<br>சிறிய கை புகைபோக்கி சிலிண்டர் –1 | 5,35,000.00<br>95,000.00<br>22,000.00<br>354.00 |
| 3. | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், சேந்தமங்கலம், நாமக்கல் - 2 | வாகன புகைபோக்கி - 1<br>கை புகைபோக்கி – 1<br>சிறிய கை புகைபோக்கி –1<br>சிறிய கை புகைபோக்கி சிலிண்டர் –1 | 5,39,400.00<br>96,100.00<br>22,500.00<br>360.00 |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வ.எண். 1-ல் ஸ்ரீ காளியம்மன் ட்ரேடிங் கார்பரேசன், நாமக்கல் – 2 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடர்ஸ் கார்பரேசன், நாமக்கல் – 2 நிறுவனத்தாருக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண் 17**

திருவத்திபுரம் நகராட்சியில் பணிபுரியும் தகுதியுள்ள நிரந்தர தூய்மை பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், பொதுப் பிரிவு பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் மகபேறு

ஆயா ஆகியோருக்கு 2026 ஆம் ஆண்டிற்கான சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலிக்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 1,00,000/-(ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) க்கு மன்றம் அனுமதி வேண்டியும் சீருடைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

செலவினத் தொகையினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 52/2022/H1

**பொருள் எண் 18**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் மையங்கள் மூலம் உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்படுகிறது. மக்காத குப்பைகளை நகராட்சி அலுவலக வளாகத்தில் பின்புறம் உள்ள MRF மையத்தில் சேகரிக்கப்பட்டு சிமெண்ட் தொழிற்சாலைக்கு மறுசுழற்சிக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதனால் நகராட்சி போக்குவரத்து செலவீனம் மற்றும் பணியாளர்கள் செலவினும் அதிகம் ஏற்பட்டுவதால் மாகாத குப்பைகளை தாங்களாக தங்களது சொந்த வாகனங்கள் மற்றும் பணியாளர்கள் கொண்டு எடுத்து செல்ல விருப்பம் உள்ள நிறுவனங்களிடம் இருந்து உள்ளூர்/வெளியூர் நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 9.80 லட்சம் பொது நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர்/வெளியூர் நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

செலவினத்தை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1462/2025/H1

**பொருள் எண் 19**

திருவத்திபுரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருக்களில் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்த காண்ட்ராக்டர் லாரிகள் மூலம் அப்புறப்படுத்தப்படும் சிறிய மற்றும் பெரிய அளவிலான குப்பை தொட்டிகள் பழுதடைந்தும் உடைந்தும் ஆங்காங்கே இருந்த குப்பைகள் தொட்டிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த குப்பை தொட்டிகள் அனைத்தும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் தூய்மை இயக்கம் சார்பாக அலுவலக வளாகத்தை சுத்தமாகவும் தேவையில்லாத / பயன்பாடு அல்லாத பொருட்களை உள்ளூர் விற்பனையாளர் மூலம் விற்பனை செய்து அவற்றின் தொகையினை அரசு கணக்கில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பயன்படுத்த இயலாத/உடைந்த குப்பை தொட்டிகளை உள்ளூர் விற்பனையாளர்கள் மூலம் விளைப்புள்ளிகள் பெற்று விற்பனை செய்து தொகையினை நகராட்சி கணக்கில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 562/2025/H1

**பொருள் எண் 20**

திருவத்திபரம் நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை தினந்தோறும் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாமையால் மாவட்ட சுகாதார அலுவலர் செய்யார் அவர்களின் ந.க. எண். 2833/அ4/2013, நாள். 02.12.2025 தேதியிட்ட கடிதத்தில் இந்நகராட்சிக்கு டெங்கு நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழித்தல் மற்றும் விழிப்புணர்வு பணிக்கு 50 நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண். 375, நாள். 28.09.2025ன் படி 01.07.2025 முதல் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்து வரும் ஸ்ரீ சாய் டிரஸ்ட் ஆரணி என்ற நிறுவனத்தாரின் பணிக்காலம் 31.12.2025 உடன் முடிவடைவதாலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் பணிக்காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.01.2026 முதல் 31.03.2026 வரை ஏற்கனவே வழங்கி வரும் ஊதிய விகிதத்தில் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளலாம் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ. 20 லட்சத்தினை வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி டெங்கு கொசு ஒழிப்பு (ம) விழிப்புணர்வு பணியினை மேற்கொண்டு வரும் ஸ்ரீ சாய் டிரஸ்ட் ஆரணி அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ. 20 இலட்சத்தினை வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி:க்கலாம்.

ந. க. எண். 1039/2024/எச்1

**பொருள் எண் 21**

திருவத்திபரம் நகராட்சிக்கு சொந்தமான புதுத்தெரு பூங்கா, வேல்சோமசுந்தரம் நகர் பூங்கா, லோகநாதன் தெரு பூங்கா மற்றும் அண்ணாநகர் பூங்கா ஆகியவை போதிய தூய்மைபணியாளர்கள் இல்லாத காரணத்தால் சரிவர பராமரிப்பு பணிகள் செய்ய சிரமமாக உள்ளதால் அவற்றினை தனியார் அறக்கட்டளை/தொண்டு நிறுவனங்கள்/ ரோட்டரி கிளப்/லயன்ஸ் கிளப் போன்றவற்றின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலனை செய்து முடிவுசெய்யலாம்.

(ந.க.எண். 2126/2022/H1)

**பொருள் எண் 22**

திருவத்திபுரம் நகராட்சியில் எதிர் வரும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு நகராட்சி பகுதிக்குட்பட்ட வாக்கு சாவடி மையங்களில் உரிய வசதிகள் ஏற்படுத்தவும், தேர்தல் விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளில் தெரிவிக்கப்படும் அனைத்து பணிகளையும் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.20.00இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 164/2026/இ1

**பொருள் எண் 23**

திருவத்திபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வெங்கட்ராயன்பேட்டை பகுதியில் சர்வே வார்டு எண் பி பிளாக் எண் 28 நகரளவு எண் 96 ல் 0.42 ஏக்கர் பரப்பளவில் 18295 சதுர அடி. பரப்பு கொண்ட இடத்தில் 14 குடியிருப்பு மனைகளுக்கு பார்வை 1 முதல் 3-ல் கண்டுள்ள அரசாணைகளின்படியும் பார்வை 4-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துறை சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி ஒற்றை சாளர முறையில் (SINGLE WINDOW SYSTEM) அடிப்படையில் இணைய வழி மூலமாக பெறப்பட்ட இணைய வழி மனைப்பிரிவு விண்ணப்பம் பார்வை 6-ல் கண்டுள்ள உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை திருவண்ணாமலை அவர்களின் JHG2SPE /2025/TVM/TCP இணையவழி மனைப்பிரிவு விண்ணப்பத்திற்க்கு பார்வை 7 ல் கண்டுள்ளவாறு உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் மனைப்பிரிவு அனுமதி எண் ம.வ/மா.ந.ஊ.உ.இ திமலை எண் 320/2025 நாள் 29.08.2025ல் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

மேற்படி மனைப்பிரிவிற்க்கு பார்வை 5 ல் கண்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 20.10.2022-ம் தேதிய சுற்றறிக்கையில் வழிகாட்டு நெறிமுறை 2-ன் படி தான பத்திர ஆவண எண் 1025/2025 நாள் 26.08.2025-ல் திருவத்திபுரம் நகராட்சிக்கு சாலை, பொது உபயோக இடம் மற்றும் மின்சார வாரியத்திற்க்கு ஒதுக்கப்பட்ட இடம் இவை அனைத்தும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை திருவண்ணாமலை அவர்களின் மூலமாக பத்திரபதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நகர் ஊரமைப்பு துறை உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் மேற்படி மனைப்பிரிவிற்க்கு நகர் ஊரமைப்பு துறை சுற்றறிக்கை ஒற்றை சாளர முறையில் (SINGLE WINDOW SYSTEM) அடிப்படையிலும் அரசாணை எண் 18 (MA1) நாள் 04.02.2019-ன் விதி எண் 41(a)-ன் படி 3000 ச.மீட்டருக்கு மேல் உத்தேச மனைப்பிரிவு அமைந்துள்ளதால் நகர் ஊரமைப்பு துறையால் OSR கட்டணம் ரூ 29,250 /- நாள் 15.06.2025 அபிவிருத்தி கட்டணம் ரூ 8500/- கூராய்வு கட்டணம் ரூ 2250/- நன்னிலை வரி கட்டணம் ரூ 200/- விளம்பரபரகை கட்டணம் ரூ10000/- மனை உட்பிரிவு கட்டணம் ரூ 10500/- ஆகிய கட்டணங்கள் நகர் ஊரமைப்பு துறையால் இணைய வழியில் 28.08.2025 ல் வசூலிக்கப்பட்டு அதன் ரசீது நகல் வரப்பெற்றுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை நாள் 20.10.2022 வழிகாட்டு நடைமுறை 4-ல் கண்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு தானபத்திரத்தின்படி சரியாக உள்ளது எனவே தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் திறந்தவெளி பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சி பாராமரிப்பிற்க்கு ஏற்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதன் படி தான பத்திர ஆவண எண் 1025/2025 நாள் 26.08.2025 மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.07.2022-ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந க எண் 12843/2022/TP2 நாள் 20.10.2022 வழிகாட்டு நடைமுறை 4-ல் கண்டுள்ளவாறு வரபெற்ற மனைப்பிரிவு வரைப்படத்தின் சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை நகராட்சி பராமரிப்பிற்க்கு ஏற்க மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண்.1093/2025/எப்1**

**பொருள் எண் 24**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5094/2022/டிபி2, நாள்.23/06/2022-ல் திருவத்திபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு உரிமைப்பட்ட பூங்கா இடம் நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு மற்றும் வரன்முறை திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுகளில் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதி எண்.126-ன்படி அரசிதழில் நகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் அறிவிக்கை செய்ய ஏதுவாக திருவத்திபுரம் நகராட்சி பகுதிகளில் நடப்பு நாள்

வரை உள்ள பூங்காக்கள், விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடங்கள் பட்டியல் தயார் செய்து அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, விதி எண்.126-ன்படி நகராட்சிக்கு உரிமைப்பட்ட பூங்கா இடம் அறிவிக்கை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2643/2018/எப்1

**பொருள் எண் 25**

திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் மற்றும் பணிஒய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி தொகையில் மேற்படி நபர்கள் கடனாக மற்றும் ஒய்வு அடிப்படையில் பெறப்பட்ட 2017-2018 -ம் ஆண்டுவரை வட்டித் தொகை வழங்கப்பட்டது. அதனை அடுத்து 2018-2019 முதல் 2025-2026 வரை சேம நலநிதி வட்டி கணக்கீடு செய்திட ஆகும். தோராய செலவினம் ரூ.1,50,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண் 26**

திருவத்திபரம் நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மறுசுழற்ச்சிக்காகத பிளாஸ்டிக் கழிவுகளை தனியார் மூலம் பேளிங்(Balling) செய்து அவர்களது சொந்த செலவில் சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மறுசுழற்ச்சி மையங்களுக்கு கொண்டு செல்லும் பணிக்கு தகுதியான அரசு அங்கிகாரம் பெற்ற உள்ளூர்/வெளியூர் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | டன் ஒன்றுக்கு ரூ. விலை விகிதம் |
|---|---|---|
| 1. | முருகப்பா டிரேடர்ஸ் 9/178-A, சக்தி நகர், வாழப்பாடி, சேலம் - 636103 | 3500/- |
| 2. | வின் மேக்கர்ஸ்32A, காந்தி சாலை கோயம்பத்தூர் – 641006 | 4750/- |
| 3. | ஸ்ரீ பாலாஜி இன்டர்சீஸ், 461C/6, ஆர். ஜி. நகர், சுவாமிநாதபுரம், திண்டுக்கல் - 642113 | 5200/- |

மேற்கண்ட விவரப்படி வரபெற்ற ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள முருகப்பா டிரேடர்ஸ், 9/178-A, சக்தி நகர், வாழப்பாடி, சேலம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு.

3.

அ.கு.

வரபெற்ற ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள முருகப்பா டிரேடர்ஸ், 9/178-A, சக்தி நகர், வாழப்பாடி, சேலம் என்ற நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 27**

திருவத்திபுரம் நகராட்சியில் 15th CFC Tied Grant 2022-23,2023-24 மற்றும் 2024-2025 கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் DMA /1198/2025-EA2 நாள் 19.01.2026ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. இதனடிப்படையில் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 05.02.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Replacement of 25HP HSC motor pump, Panel board accessories at Kodanagar Headworks in Thiruvathipuram Municipality. | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | 2.05% அதிகம் |
| 2. | Replacement of 25HP HSC motor pump, Panel board accessories at Kazhiyur Headworks in Thiruvathipuram Municipality. | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | 1.90% அதிகம் |
| 3. | Replacement of Openwell submersible pumpset, Panel board, UG Cable and Electrical accessories and valves at Well.no.3 and 4 in Kazhiyur Headworks in Thiruvathipuram Municipality. | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | 1.85% அதிகம் |
| 4. | Replacement of Openwell submersible pumpset, Panel board, UG Cable and Electrical accessories and valves at Well.no.4 and 5 in Kodanagar Headworks in Thiruvathipuram Municipality. | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | 1.88% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | Providing Compound wall in Koda Nagar MCC Head Works in Thiruvathipuram Municipality | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | 2.15% அதிகம் |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| 6. | construction of valve chamber at 1 to 27 in thiruvathipuram Municipality | 19.10 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | 2.01% அதிகம் |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| 7. | Replacement of Gate sluice valve at Existing water supply main line in Thiruvathipuram Municipality. | 10.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | 2.11% அதிகம் |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | -0.02% குறைவு |
| 8. | Supply and Delivery of 1.5hp motor and panel Board in Thiruvathipuram Municipality. | 20.00 | சக்திவேல் ஒப்பந்ததாரர் | 2.15% அதிகம் |
| | | | கருணாநிதி, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1 முதல் 4 வரையிலான பணிகளை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சக்திவேல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும், மற்றும் வரிசை எண் 5 முதல் 8 வரையிலான பணிகளை ஒப்பு நோக்கு செய்ததில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கருணாநிதி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 1510/2024/இ1**

**பொருள் எண் 28**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 39/2025/SS1-14 நாள் 06,01,2026 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், திருவத்திபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாடு திட்டம் 2025-2026ன் கீழ் ரூ.264.982இலட்சம் மதிப்பீட்டில் 1 சிப்பங்களான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 28.01.2026 அன்று பெறப்பட்டு, 30.01.2026 அன்று Price Bid திறக்கப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP 2025-2026)

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (குறைவு/அதிகம்) |
|---|---|---|---|---|
| 1. | Renewal of CC Surface to Paver Blocks at NEW STREET 7TH CROSS(039005R074), T.M ADHIKASAVAN STREET (039015R193), VETERINARY HOSPITAL EAST MADA VITHI(039024R266), KUMARAN STREET 1 ST LANE(039025S008). and Renewal of BT Surface at VOC STREET(039002R063),OLD DSP STREET(039004R048),RDO OFFICE STREET (039004R049), ANAKKAVOORAN STREET (039012R117),GOPAL STREET (039014R137), NALLATHANNER KULA STREET(039009R173), NALLATHANNER KU LA STREET LANE (RIGHT 1) (03900R174), KODA NAGAR HEAD HOUSE TO BYPASS(039014R192),THIRUNANAS AMNTHER STREET(039024R264), KUMARAN STREET TO BRIDGE (039025R281), EAST MADA STREET (039024R262) in Thiruvathipuram Municipality | 264.982 | திரு.N.நடராஜன் | -0.09% மதிப்பீட்டு சதவிகிதத்தை விட குறைவு |
| | | | திருவாளர் NPG Brothers | +2.09% மதிப்பீட்டு சதவிகிதத்தை விட குறைவு |
| | | | Gayathri Builders | தொழில்நுட்ப ரீதியாக அங்கிகரிக்கப்படவில்லை |
| | **மொத்தம்** | **264.982** | | |

மேற்படி வரிசை எண் 1 பணிகளுக்கு தலா 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.N.நடராஜன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது ஏற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1075/2025/இ1

பொருள் எண் 29

திருவத்திபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கண்ணுகாபுரம் தெரு பகுதியில் திருவோத்துர் சர்வே வார்டுஎண் பி பிளாக் எண் 42 நகரளவுஎண் 25 ல் பழைய சர்வே எண் 261/5,

262/5 1.08 ஏக்கர் 4383 சதுர.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் 34 குடியிருப்பு மனைகளுக்கு அரசாணைஎண் 18 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019, அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.07.2022 மற்றும் நகர் ஊரமைப்புதுறை சென்னை அவர்களின் சுற்றறிக்கை 320/2022/TCP3 நாள்: 07.01.2022 படி ஒற்றைசாளரமுறையில் (SINGLE WINDOW SYSTEM) அடிப்படையில் இணையவழி மூலமாக பெறப்பட்ட இணையவழி மனைப்பிரிவு விண்ணப்பம் நகர்ஊரமைப்புதுறையால் பரீசீலிக்கப்பட்டு நகர்ஊரமைப்புதுறை உதவிஇயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் 18.12.2025 ம் தேதிய இணைய வழி மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

மேற்படி மனைப்பிரிவிற்க்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 20.10.2022-ம் தேதிய சுற்றறிக்கையில் வழிகாட்டு நெறிமுறை2-ன் படி தான பத்திர ஆவணஎண் 1477/2025 நாள் 28.11.2025 -ல் சாலை, பொது உபயோக இடம் மற்றும் மின்சாரவாரியத்திற்க்கு ஒதுக்கப்பட்ட இடம் இவை அனைத்தும் திருவத்திபுரம் நகராட்சிக்கு நகர் ஊரமைப்பு துறை முலம் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புதுறை உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் ம.வ/ மா.ந.ஊ.உ.இ (திமலை ) எண் 441/2025 இணையவழி எண் T12722CX /2025 /-TVM/ TCP நாள் 18.12.2025 -ன் படி நகர் ஊரமைப்புதுறை மூலமாக பத்திரபதிவு செய்து பத்திரம் நகல் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு நகர்ஊரமைப்புதுறை உத்தரவுடன் இவ்வலுவலகத்திற்க்கு வரப்பெற்றுள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவிற்க்கு நகர்ஊரமைப்புதுறை சுற்றறிக்கை ஒற்றை சாளர முறையில் (SINGLE WINDOW SYSTEM) அடிப்படையிலும் அரசாணைஎண் 18 நாள் 04.02.2019 விதிஎண் 41(a)-ன் படி 3000 ச.மீ க்கு மேல் உத்தேச மனைப்பிரிவு அமைந்துள்ளதால் நகர்ஊரமைப்புதுறையால் OSR கட்டணம் ரூ 43,70,477/ நாள் 16.12.2025 அபிவிருத்தி கட்டணம் ரூ21915. /- கூராய்வு கட்டணம் ரூ 6575/- நன்னிலை வரி கட்டணம் ரூ 10800/- விளம்பரபலகை கட்டணம் ரூ10000/- மனை உட்பிரிவு கட்டணம் ரு 18000 ஆகிய கட்டணங்கள் நகர் ஊரமைப்பு துறையால் இணைய வழியில் நாள் 17.12.2025 ல் வசூலிக்கப்பட்டு அதன் ரசீது நகல் வரப்பெற்றுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 20.10.2022-ம் தேதிய சுற்றறிக்கையில் வழிகாட்டு நெறிமுறை 4 ல் கண்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு தானப்பத்திரத்தின் படி சரியாக உள்ளது எனவே தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் திறந்தவெளி பொது ஒதுக்கிட்டினை உள்ளாட்சி பாராமறிப்பிற்கு ஏற்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும் என குறிப்பிட்டுள்ளதன் படி தான பத்திரம் ஆவண எண் 1477/2025 நாள் 28.11.2025 மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.07.2022-ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந க எண் 12843/2022/TP2 நாள் 20.10.2022 வழிகாட்டு நடைமுறை 4-ல் கண்டுள்ளவாறு வரபெற்ற மனைப்பிரிவு வரைப்படத்தின் சாலை

மற்றும் பொது உபயோக இடத்தினை நகராட்சி பராமரிப்பிற்க்கு ஏற்க மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண்**.1587/**2025/எப்1**

பொருள் எண் 30

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் 9 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு Water Meter பொருத்துதல் பணி மேற்கொள்ள உத்தேச தோராய மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதி 2025-2026ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 89 /2026/இ1

பொருள் எண் 31

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் 19.11.2025 அன்று காணொளி ஆய்வு கூட்டத்தில் அனைத்து நகராட்சிக்கும் தொழில் வரியினை தவறுதலாக இருமுறை வரிவிதிப்புகள் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பணியிடம் மாறுதலின் போது கேட்பு 2012- 2026 வரை நிலுவையில் தொடந்து நீண்ட நாள்களாக தொழில் வரி வசூல் செய்ய இயலாமல் உள்ள நிலையில் வரி வதிப்புகள் கணினியில் இருந்து நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிக்குட்பட்டுள்ள 27 வார்டுகளில் அமைந்துள்ள தனியார் கட்டிடங்களில் தொழில் வரி விதிப்பு செய்யப்பட்டு கணிணியில் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தொழில் வரி விதிப்பு எண்கள் 349 தொழில் வரி விதிப்பு கேட்பு தொகை மொத்தம் ரூ. 3063294/- யை பட்டியலில் கண்டுள்ளவாறு கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் /2026/அ2

நகரமன்ற தலைவர்,

திருவத்திபுரம் நகராட்சி.